IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.75/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw1 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | **முத்துச்செல்வி** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**எதிரி ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

09.03.2023

நான் தற்பொழுது புளியங்குடியில் வசித்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்துவருகிறேன். 11.8.2022 ம் தேதி நான், என்னுடைய கணவர் ஈஸ்வரன், விஸ்வாதினி, ராணி, முகேஷ்பிரியா, மனோஷ்குமார், கபிலேஷ்குமார், கிருஷ்ணலீலாவதி, ரமேஷ், மொத்தம் 19 நபர்கள் டாடா ஏசி வண்டி புளியங்குடியிலிருந்து இரவு 8.00 மணிக்கு கிளம்பினோம். வண்டியை சுந்தரமூர்த்தி

என்பவர் ஓட்டினார். நாங்கள் கிருஷ்ணலீலாவதி தலைமையில் சென்றோம். இருக்கன்குடி கோவிலுக்கு செல்வதற்காக சென்று கொண்டிருந்தோம். திருவேங்கடம் – கோவில்பட்டி செல்லும் பைபாஸ் ரோட்டில் அப்போது இரவு 10.30 மணி இருக்கும் சென்று கொண்டிருந்த போது சிப்பிப்பாறை சனீஸ்வரர் கோவில் அருகில் எங்கள் வண்டி மேற்கிலிருந்து கிழக்காக சென்றது. விபத்தை ஏற்படுத்திய வண்டி கிழக்கிலிருந்து மேற்கிலிருந்து வேகமாக கவனமில்லாமல் ஹாரன் அடிக்காமல் அந்த டிப்பர் லாரி வலதுபுறமாக நேருக்கு நேர் எங்கள் வண்டியை இடித்து வண்டியின் பகுதி முழுவதும் இடித்துவிட்டான். வண்டியை ஓட்டிய நபரின் பெயரை பின்னர் தெரிந்து கொண்டேன். அவர் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த சிவராஜ் ஆவார். எதிரி ஆஜராகி இருந்தால் நான் அடையாளம் காண்பித்திருப்பேன். டிப்பர் லாரியின் பதிவு எண் எனக்கு ஞாபகம் இல்லை. எல்லோரும் கத்தினோம். சிப்பிப்பாறையில் இருந்த ஊர் தலைவர் ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி வரச் சொல்லி எங்கள் எல்லோரையும் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். எதிரியின் வாகனம் மோதியதில் ஏழு பேருக்கு கொடுங்காயம் ஏற்பட்டது. அதில் கபினேஷ்குமார் என்ற சிறுவன் இறந்துவிட்டான். கிருஷ்ணலீலாவதி என்பவரும் இறந்துவிட்டார். எனது மகன் தினேஷ்க்கு வலது கை எலும்பு முறிந்துவிட்டது. முகேஷ்பிரியாவிற்கு வலது கால் எலும்பு முறிந்துவிட்டது. ராணிக்கு இடது மண்டையில் ஆணி குத்தி ஓட்டை ஏற்பட்டது. அவருக்கு இடது தோள்பட்டை எலும்பும் முறிந்துவிட்டது. விஷ்வாதினிக்கு வலது கையில் முறிந்துவிட்டது. தலையிலும் தையல் போடப்பட்டது. மனோஷ்குமாருக்கு தலையின் பின்பகுதியில் அடி ஏற்பட்டது. 5 நாள் சுயநினைவில்லாமல் இருந்தார். மதிரேசன் என்பவருக்கு வலது கால் எலும்பு முறிந்துவிட்டது. மற்றொரு பெண்ணிற்கு இடுப்பிலும், காலிலும் அடிபட்டது. எனது கணவர் ஈஸ்வரனுக்கு தலையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. 8 தையல் போடப்பட்டது. சுந்தரமூர்த்திக்கு இடது தலையில் காயம் ஏற்பட்டது. எனக்கு உடம்பில் உமைக்காயம் ஏற்பட்டது. நாங்கள் அனைவரும் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தோம். ஏழாயிரம்பண்ணை போலிசார் மருத்துவமனைக்கு வந்தனர். போலிசாரிடம் நான் நடந்த சம்பவத்தை சொன்னேன். அங்கிருந்த ஒரு பையன் இதை எழுதினான். பின்னர் நான் அதில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும்

புகார் மனு அதுவாகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.75/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw2 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சுந்தரமூர்த்தி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**எதிரி ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2023

நான் தற்பொழுது புளியங்குடியில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்துவருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். 11.8.2022 ம் தேதி இரவு 8 மணிக்கு புளியங்குடியில் இருந்து கிழம்பி இருக்கன்குடிக்கு சென்றோம். எனக்கு சொந்தமான டாடா ஏசி வண்டியில் சென்றோம். வண்டியை நான் தான் ஓட்டினேன். TN 76 W 3382 வண்டி எண்ணாகும். வண்டியில் 19 நபர்கள் இருந்தனர்.

திருவேங்கடத்திலிருந்து கோவில் பட்டிசெல்லும் சாலையில் சிப்பிப்பாறை சனீஸ்வரன் கோவில் அருகே சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த டிப்பர் லாரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், எந்த ஒரு சிக்னலும் இல்லாமலும், ஹாரன் அடிக்காமலும் வந்து நேரே எனது லோடு ஆட்டோ டாடா ஏசி வண்டியை வலது புறம் மோதியதில் வண்டி தடுப்பு சுவற்றில் விழுந்து கவிழ்தது. எல்லோருமே ரத்த வெள்ளத்தில் இருந்தனர். எல்லோருக்கும் மண்டையில் ரத்தம் வந்தது. கால், கைகளில் ரத்தம் இருந்தது. சில நபர்களுக்கு தோள்பட்டை, மற்றும் கால்கள் ஒடிந்து இருந்தது. எனக்கு தலையிலும், வலது கையிலும் அடி ஏற்பட்டது. சிப்பிப்பாறை பஞ்சாயத்து தலைவர் குணசேகரன் மற்றும் ஊர்மக்கள் வந்து எங்களை காப்பாற்றி கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். விபத்து ஏற்படுத்திய லாரியை தாமஸ் மகன் சிவராஜ் என்பவர் ஓட்டியதாக தெரிந்துகொண்டேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தால் அடையாளம் காண்பித்திருப்பேன். விபத்தில் கபிலேஷ் என்னும் குழந்தையும், கிருஷ்ணலீலாவதி என்பவரும் திருநெல்வேலி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டனர். நான் 4 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். பின்னர் போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.75/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw3 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **ஈஸ்வரன்** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2023

நான் தற்பொழுது புளியங்குடியில் வசித்து வருகிறேன். நான் மைக்செட் வைத்து தொழில் செய்துவருகிறேன். அ.சா.1 எனது மனைவி. அ.சா.2 ஐ எனக்கு தெரியும். 11.8.2022 ம் தேதி இருக்கன்குடிக்கு சாமி கும்பிடுவதற்காக இரவு 8 மணிக்கு புளியங்குடியில் இருந்து டாடா ஏசி வண்டியில் கிழம்பினோம். வண்டியில் குழந்தை உட்பட 19 நபர்கள் இருந்தனர். எங்களது வண்டியை அ.சா.2 ஓட்டினார். திருவேங்கடம்

அருகே சென்றபோது சிப்பிப்பாறை சனீஸ்வரன் கோவில் அருகே எங்கள் வண்டி மெதுவாக போனது. எதிரே வந்த லாரி ஹாரன் அடிக்காமல், லைட்டும் அடிக்காமலும் வந்து எங்கள் வண்டியின் மீது மோதியதில் எங்கள் வண்டி சாய்ந்துவிட்டது. எங்கள் வண்டி மீது மோதியது டிப்பர் லாரி ஆகும். சத்தம் கேட்டவுடன் பக்கத்தில் இருந்த ஆட்கள் வந்தனர். அவர்கள் எங்களை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்தில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது மகன் தினேஷ்க்கு வலது கையிலும், காலிலும், தலையிலும் அடிபட்டது. இதுசம்பந்தமாக போலிசார் விசாரித்தனர். நான் மயக்கமாக இருந்ததால் லாரி ஓட்டியவரை பார்க்கவில்லை. அவர் பெயரை கேட்க வில்லை.

குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.